பக்கங்கள்:

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 05 உ புதன்கிழமை (19 - 6 - 1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 196

# புதிய இந்தியப் பிரதமர் யார்?

# நரசிம்மராவா? சரத் பவாரா?



நரசிம்மராவ்

## இரண்டொரு தினங்களில் தெரியும்

புதுடில்லி, ஜூன் 19

இந்திரா காங்கிரஸ் கட்சி அமைக்கவிருக்கும் சிறுபான்மை அரசின் பிரதமராக யார் தெரிவு செய்யப்படுவார்கள்? கட்சியின் தற்போதைய தலைவரான பி.வி. நரசிம்மராவா? மகாராஷ்டிர முதல்வரான சரத்பவாரா?

இது குறித்து இறுதி முடிவு இரண்டொரு தினங்களில் கூடவிருக்கும் காங்கிரஸ் கட்சியின் புதிய எம்.பிக்களின் கூட்டத்தில் எடுக்கப்படும்.

காங்கிரஸ் கட்சிக்கு வெளியில் இருந்துகொண்டே ஆதரவளிக்கப் போவதாக இடதுசாரிக் கட்சிகள் அறிவித்திருப்பதால், காங்கிரஸ் கட்சியின் சிறுபான்மை அரசு உடனடியாகப் பதவியேற்பதில் சிக்கல் ஏதும் இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக நரசிம்மராவை ஏகமனதாகத் தெரிவு செய்வதன் மூலம், கட்சிக்குள் பிளவுஇல்லை என்பதை வெளிப்படுத்த கட்சியின் முக்கிய பிரமுகர்கள்

[6ஆம் பக்கம் பார்க்க]



சரத்பவார்

## தமிழக சட்டசபையில் பெண்கள் "ஆதிக்கம்"!

சென்னை, ஜூன் 19

தமிழக சட்டசபையில் 33 பெண்கள் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டு உள்ளனர்.

தமிழக சரித்திரத்திலேயே ஆகக் கூடுதலான பெண்கள் சட்டசபையில் அங்கம் வகிக்கப்போவது இதுவே முதற்தடவையாகும்.

101 பெண்கள் இத் தேர்தலில் போட்டியிட்டனர். அவர்களில் அ. தி. மு. க. சார்பில் செல்வி ஜெயலலிதா உட்பட 27 பேர் தெரிவாகினர்.

இந்திரா காங்கிரஸ் சார்பில் 6 பெண்கள் தெரிவாகினர். (உ-எ-த)

## கொக்கட்டிச்சோலையில் 222 தமிழர் உயிரிழந்தனர்!

கொழும்பு, ஜூன் 19

கொக்கட்டிச்சோலையில் இராணுவம் நடத்திய படுகொலையில் 222க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உயிரிழந்திருக்கக்கூடும் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலைகள் குறித்து கொழும்பில் விசாரணை!

கொழும்பு, ஜூன் 19

கொக்கட்டிச்சோலை படுகொலை பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு இன்று முதல் தனது விசாரணைகளை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

(முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்)

## முச்சந்தி முரளி



அப்ப...... அல்லி ராணிகள் ராஜ்ஜியம் எண்டு சொல்லுங்கோ...!

## மேனகாவும் தோல்வி!

புதுடில்லி, ஜூன் 19

மறைந்த சஞ்சய் காந்தியின் மனைவி மேனகா காந்தி உத்தர பிரதேசத்தில் நாடாளுமன்ற தொகுதி ஒன்றில் சமாஜவாதி ஜனதா தள் சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். (ஒ-த)

## வவுனியாச் சண்டையில் 29 படையினர் மரணம்

கொழும்பு, ஜூன் 19

வவுனியாப் பகுதியில் ஸ்ரீலங்காப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்து வரும் கடும் சண்டையில் கடந்த திங்கள் இரவு மட்டும் ஆறு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்று இராணுவ வட்டாரங்கள் கூறியதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

வவுனியாச் சண்டையில் 23 இராணுவத்தினர் ஏற்கனவே கொல்லப்பட்டனர் என்றும்—

பெரும் எண்ணிக்கையான படையினர் படுகாயமடைந்தனர் என்றும் இராணுவ வட்டாரங்கள் முன்னர் கூறியிருந்தன. (ஒ-எ)

## மட்டக்களப்பில் தொடர்ந்து படையினர் அட்டூழியம்!

யாழ்ப்பாணம், ஜூன் 19

மட்டக்களப்பில் புல்லுமலை கொலனியில் இராணுவத்தினர் பொதுமக்கள் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

கடந்த புதனன்று படையினர் இக்கிராமத்தைச் சுற்றி வளைத்து தமிழரின் 20 வீடுகளை எரித்துள்ளனர்.

செல்லத்துரை தங்கமணி என்ற பெண்ணைச் சுட்டுக் கொன்று சடலத்தை அவரது

[6ஆம் பக்கம் பார்க்க]

## ஆசிரிய மாணவர்கள் யாழ். நகரில் பேரணி

யாழ்ப்பாணம், ஜூன் 19

வடக்கு - கிழக்கு பகுதிகளில் ஸ்ரீலங்காப் படையினர் கண்டபடி ஆசிரியர்களைக் கைது செய்வது, கொலை செய்வது மற்றும் அத்துமீறல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆகியவற்றைக் கண்டித்து பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்கள் நேற்று யாழ். நகரில் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தினர்.

திருநெல்வேலியில் அமைந்துள்ள பலாலி கலாசாலையில் இருந்து ஆரம்பமான பேரணியில் பல நூற்றுக் கணக்கான ஆசிரிய மாணவர்கள் பங்குபற்றினர்.

பலாலிவீதி வழியாக வந்த பேரணி யாழ். நகரை அடைந்து, அங்கிருந்து ஆஸ்பத்திரிவீதி வழியாகச் சென்று யாழ். செயலகத்தை அடைந்தது.

அங்கு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசவுக்கு விலாசமிடப்பட்ட மகஜரின் பிரதி ஒன்று வாசிக்கப்பட்டு, ஒப்படைக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் சார்பாக மேலதிக அரச அதிபர் திரு. க. சண்முகநாதன் மகஜரைப் பெற்றுக்கொண்டார்.

அதைத் தொடர்ந்து பேரணி கச்சேரி — நல்லூர் வீதி வழியாக வந்து செஞ்சி

[6ஆம் பக்கம் பார்க்க)

## முத்தமிழ் விழாக் காண திரண்ட மக்கள் கடல்



முத்தமிழ் விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சிகளைக் கண்டுகளிப்பதற்காக யாழ். முற்றவெளி மைதானத்தில் கடல் எனத் திரண்ட மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதியினர்.

(படம்:- கே. எஸ். ஆர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெனாசிரின் கணவரை விசாரித்த நீதிபதி கொலை

இஸ்லாமபாத், ஜூன் 19 முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் கணவரான ஆஸிப் அலி சர்தாரி மீதான மோசடி மற்றும் கொலை முயற்சி வழக்குகளை விசாரித்து வரும் சிரேஷ்ட நீதிபதி நபிஷே ஜூனஜோவை இனந்தெரியாத துப்பாக்கி மனிதர்கள் நேற்று சுட்டுக் கொன்றனர் என அறிவிக்கப்படுகிறது.

அவருடன் இன்னொரு நபரும் அச்சம்பவத்தில் உயிரிழந்தார். (இ-எ)


## யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி
# இறுதிப்பரீட்சை 1990

இலங்கைப்பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ள வணிக / பொறியியல் / தொழிற்றுறை 1990 ஆம் இறுதித் தேர்வுக்கு தோற்றவுள்ள (1991 மார்ச் மாதத்தில் முடிவுற்ற) மாணவர்கள் இப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்களை தங்கள் பகுதித் தலைவர்களிடம் இதுவரை சமர்ப்பிக்காவிடின் 1991-06-24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நிரப்பிக்கொடுக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

க. ஜெயரட்ணம்
அதிபர்
தொழில் நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்,

(சீ/10127)



## சாவகச்சேரி நகரசபை
# ஆதனவரி அறிவித்தல்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் உள்ள ஆதனங்களுக்குரிய 1991 ஆம் ஆண்டு 2 ஆம் கந்தாயத்திற்கான ஆதனவரியை 28-6-1991 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் எதுவித தண்டமுமின்றி செலுத்திக் கொள்ளலாமெனவும், 3 ஆம், 4 ஆம் கந்தாயங்களுக்கான வரியை 5% வரிக்கழிவுடன் செலுத்தலாமெனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

குறிப்பிட்ட திகதிக்குப் பின் வரியைச் செலுத்துவோர் அதற்கான தண்டத்தோடு செலுத்த வேண்டிவரும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

த. நவரத்தினராசா:,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 17-6-1991.

(சி 0125)



# RADIO T.V & DECK

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்:

22 - 06 - 1991

* இலகு விரிவுரைகள்.
* சிறந்த செய்முறைப் பயிற்சி.

விவரங்களுக்கு:

GROUP

North Ceylon Technical Institute
14, St. Peter's Lane,
Hospital Road,
Jaffna.

(சி-0156)



# ஜாம் (JAM) போத்தல்கள் தேவை

திருகு மூடி (Screw Lids) போடக் கூடிய JAM போத்தல்கள் தேவை.

- நியாயமான விலையில்

காலை 9 மணி முதல் 4-30 மணி வரை கிழமை நாட்களில் பின்வரும் முகவரியில் கொள்வனவு செய்யப்படும்.

## Taste Line Industries (Pvt) Ltd.

14, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[17230]


# வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம் ஜூன், 19 மூளாய், வரதன்புலே, சித்தி விநாயகா முத்துக்குமார சுவாமி ஆலயத்துக்குப் புதிதாகச் செய்யப்பட்ட சித்திரத் தேரின் வெள்ளோட்டவிழா எதிர்வரும் திங்கட்கிழமை நண்பகல் நடைபெறவுள்ளது. (அ)

# யோகர் சுவாமி குருபூசை

கொழும்புத்துறை, ஜூன் 19 யோகர் சுவாமிகள் குருபூசை அவர் அவதரித்த ஆனி உத்தரம் நட்சத்திரதினமான இன்றுபுதன்கிழமை காலை 9 மணிக்கு புங்கன்குளம் யோகர் சுவாமிகள் மகளிர் ஆசிரமத்தில் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

புங்குடுதீவு சர்வோதய அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகிப்பார்.

யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைகள் ஓதுதலும், பஜனைகளும் இடம்பெறும். (அ-30)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 19 விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க யாழ் மாவட்ட (வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம்) கொத்தணி தொடர்பாளர், கிராமியத் தொடர்பாளர்களுக்கான ஒன்றுகூடல் நாளை மாலை 3மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவிருக்கிறது. (ஓ)

# பண்டேஜ் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 19 யாழ். போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பகுதியில் பண்டேஜுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அதே சமயம் வெளிநோயாளர் பிரிவில் மருந்து கட்டும் பகுதியில் மருந்து கட்ட வருவோர் பண்டேஜ் கொண்டு வரவேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

அப்பிரிவில் பண்டேஜ்கடந்த ஒருமாத காலமாக பாவனையில் இல்லை என அப்பிரிவு பொறுப்புத் தாதியரால் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

# விசர்நாய்க் கடி மருந்து இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 19 விசர்நாய்க்கடிக்குப் பாவிக்கப்படும் ஏ. ஆர். வி. தடுப்பூசி மருந்து ஒரு மாதத்துக்கு முன்பே முடிவடைந்துவிட்டது.

விசர் நாய்க்கடிக்குள்ளான பலர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

இவ்வருடத்துக்கான முதல் காலாண்டுக்குரிய மருந்து வகைகளுடனேயே விசர் நாய்க்கடி மருந்து கடைசியாக அனுப்பிவைக்கப்பட்டது என்றும்—

அதுவும் மிகக் குறைவான தொகையே அனுப்பிவைக்கப்பட்டது எனவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-15)

# பாண்டிச்சேரி முதல்வராக கண்ணன்

புதுவை, ஜூன் 19 பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் இந்திரா காங்கிரஸ் அ. தி. மு. க. கூட்டணியின் சார்பில் காங்கிரஸ் கட்சிப் பிரதிநிதியான திரு. எஸ். கண்ணன் முதலமைச்சராக வரக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன என தெரிவிக்கப்படுகின்றது. காங்கிரஸ் — அ. தி. மு. க.

(6ஆம் பக்கம் பார்க்க)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை - மகாலிங்கம்

(லிங்கம் ஸ்ரோர்ஸ் – கிளிநொச்சி)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது இல. 33, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளியில் வசிப்பவருமாகிய கணபதிப்பிள்ளை – மகாலிங்கம் 17 – 06 – 1991 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலம் சென்ற கணபதிப்பிள்ளை, இராசம்மாவின் அருமை மகனும், பிறேமலதாவின் அருமைக் கணவரும், சிந்துஜா, சதீஷ்சன் ஆகியோரின் அருமைத் தந்தையும், தருமலிங்கம், சத்தியபாமா ஆகியோரின் அருமை மருமகனும், சொர்ணலிங்கம், கேதாரலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அருமை சகோதரனும், சாந்தி, ராசன், ஈசன், லிங்கன், சுதா, கோகுலன், ஆரூரன் (ஜேர்மனி), கௌரி, சுபா, உதயன், வாணி ஆகியோரின் அருமை சித்தப்பாவும், ராஜேஸ்வரி, மங்கையர்க்கரசி (ஜேர்மனி), தர்மபாபு (ஜேர்மனி), உதயகுமார் (பிரான்ஸ்), ஜெயக்குமார் (பிரான்ஸ்), பத்மலோசினி, பிரதீப் ஆகியோரின் அருமை மைத்துனரும், நளாயினியின் (ஜேர்மனி) அன்புச் சகோதரனும், அபிநயனின் (ஜேர்மனி) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (19 - 06 - 1991) இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் துண்டி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
மு. வ. தர்மலிங்கம்.
(மாமனார்)

33, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி.
யாழ்ப்பாணம்.

[17221]

## செல்வி தர்சாளினி ஜோர்ஜ்

செல்வி தர்சாளினி ஜோர்ஜ் 18-6-91இல் காலமானார். அன்னார் ஜோர்ஜ், மல்லிகா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், மைதிலி, சஜீவன், கஜேந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அல்பேட், பிலோமினா, காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை, கத்தரீன் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று 19-6-91 புதன்கிழமை காலை 9 மணிக்கு புனித சூசையப்பர் சேமக்காலையில் நடைபெறும்.

சங்கானை றோட்,
அச்சுவேலி.
[17228]

தகவல்
ஞா. அல்பேட்
பேரன்

## திருமதி சிவபாக்கியம் சங்கரப்பிள்ளை

இளவாலை பத்தாவத்தையைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியம் சங்கரப்பிள்ளை காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற ஆசிரியர் த. ஆ. சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகலிங்கம் [மலேசியா, ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்], சேதுப்பிள்ளை ஆகியோரின் ஏகபுத்திரியும், சந்தானம் [பொறியியலாளர், U.N.D.P., லாவோஸ்], விமலகாந்தன், நாகநந்தினி [ஆசிரியை, பெரியவிளான் றோ. க. வித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவர்,

ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை காலை 9. 00 மணிக்கு இளவாலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

பத்தாவத்தை,
இளவாலை.

த. ஆ. சங்கரப்பிள்ளை
[கணவர்]

[4160]

## சின்னப்பு இராசையா

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னப்பு இராசையா 17 – 06 - 1991 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு வள்ளியம்மை தம்பதியின் அன்பு மகனும் சிவபூரணியின் அன்புக்கணவரும், சிவஞானராசா (ஜேர்மனி), சிவனேஸ்வரி (ஆசிரியை, புங்குடுதீவு), சிவனேஸ்வரன் (ஜேர்மனி), சிவரஞ்சன் (U. K) ஆகியோரின் அன்புத் தந்தையும் மாலதி (ஜேர்மனி)யின் அன்பு மாமனாரும் கணபதிப்பிள்ளை, மதியாபரணம், காலஞ்சென்ற வேலாயுதம், நாகலிங்கம், சரவணமுத்து, மீனாட்சி ஆகியோரின் சகோதரரும், கதிரேசு பொன்னம்மாவின் மருமகனும், கந்தசாமி, சரோஜினிதேவி, சாம்பசிவம் (சோதிடர்), லிங்கதேவி, சிதம்பர நடராசா (பொன்மணி ஸ்ரோர்ஸ், கொழும்புத்துறை), இராசயோகபூபதி, வருணநாதன் (சுகாதார பரிசோதகர், கோப்பாய்) நவபுஷ்பராணி, முருகபத்மராசா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். இறுதிக்கிரியைகள் 19 – 6 - 1991 புதன்கிழமை 2 மணிக்கு நயினாதீவில் நடைபெறும், இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிதம்பர நடராசா
(மைத்துனர்)

(4161)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Computer Programming In BASIC Language

**4 MONTHS**

(சனி, ஞாயிறு, வகுப்புகள்)

ஆரம்பம்: 23 - 06 1991

8-30 மணி

**LECTURES BY MEMBERS OF THE INSTITUTE OF DATA PROCESSING MANAGEMENT [LONDON]**

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு:

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3 ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். (சி-0120)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளை

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு


## அங்கத்தினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 22-06-1991 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் நடைபெறும். சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தினர் அனைவரையும் இதில் பங்குபற்றிக் கொள்ளும்படி அழைக்கின்றோம். இதில் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

— கௌரவ செயலாளர்.

73, கண்டி றோட்,
யாழ்ப்பாணம்.
17-06-1991 [சி-0123]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுறவு: 19-11-1975

விண்ணுறவு: 30-6-1990

திதி: 19-6-1991

### வீரவேங்கை பேபி [செல்லையா அகிலநாதன்]

**பொங்கு தமிழீழப் போரில் மடிந்தவன்**

அன்னை தமிழ்த் தாயின் துயரறிந்து
பொங்கி எழுந்தவன் புயலாய் நின்றவன்
பொழுதெலாம் விடுதலை உணர்வு கொண்டிருந்தவன்
பொங்கு தமிழீழப் போரில் மடிந்தவன்.

சொந்தமொடு பந்த பாசமெலாம் நீக்கி
தேசத்தின் விடுதலைக்காய் துப்பாக்கி தூக்கி
களத்தினில் எதிரியை நித்தம் தாக்கி
புதியவர லாற்றில் நீயொ ருவனானாய்.

ஆண்டொன்று ஓடி மறைந்து போனாலும்
பேபியுன் சிந்தனையை கனவுகளை நனவாக்க
அணியொன்று புலியாகி திக்கெட்டும் நிற்கிறதே
தமிழீழ விடிவிற்கு பேபிநீயொரு விடிவெள்ளி.

தந்தை, தாய், அண்ணன்,
தம்பி, உறவினர்கள்.

உரும்பராய் தெற்கு,
உரும்பராய். (17215)

## 10 ஆம் கட்ட நிவாரணம்

உரும்பராய், ஜூன் 19

இடம் பெயர்ந்தவர்களுக்கான 10ஆம் கட்ட நிவாரணம் வழங்கும் வேலை ஆரம்பமாகியுள்ளது. வலி-கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளில் நேற்று முதல் இந்த விநியோகம் நடைபெறுகிறது. (இ-154)

## கருத்தரங்கு

பருத்தித்துறை, ஜூன் 19

வடமராட்சிக் கோட்டக் கல்விப் பிரிவிலுள்ள ஆண்டு 6 தொடக்கம் 11 வரையிலான பாடசாலைகளில் உடற்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இம் மாதம் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (இ-118)

## படகுச் சேவை ஸ்தம்பிதம்

கடந்த திங்கட்கிழமை முதல் குறிகாட்டுவான் — நெடுந்தீவு படகுச் சேவை ஸ்தம்பிதமடைந்துள்ளது.

அன்றைய தினம் நெடுந்தீவுக்குச் செல்லும் பொருட்டு குறிகாட்டுவானுக்கு வந்திருந்த பெரும் எண்ணிக்கையான பிரயாணிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

குறிகாட்டுவானில் உணவு, தங்குமிட வசதிகள் இன்றி கஷ்டப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் மீண்டும் யாழ் நகருக்குத் திரும்பினர்.

திங்கள், வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே படகுச்சேவை என்றாலும் இன்று புதன்கிழமை படகு வரலாம் என்ற எதிர்பார்ப்பில் பலர் இன்னும் குறிகாட்டுவானில் தரித்து நிற்கிறார்கள். [இ-111]

## அகதிகளுக்கு குடிசைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாடசாலைகளில் இயங்கும் அகதி முகாம்களை மூடுவதற்கு வசதியாக அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்காலிக குடிசைகளை அமைக்க உதவி வருகின்றன.

தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். நகரப் பாடசாலைகளில் தஞ்சம் அடைந்திருந்தவர்களுக்கு தற்காலிக குடிசைகள் அமைத்து அவர்களை குடியமர்த்த தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆகியவை நடவடிக்கை எடுத்துள்ளன.

இதன் முதற்படியாக அரியாலை பார்வதி வித்தியாலயத்துக்கு முன்பாக 250 குடும்பங்களும்; அரியாலை நாவலடியில் 200 குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டுள்ளன.

அரியாலை, கைதடி, வட்டுக்கோட்டைப் பகுதிகளிலும் குடிசைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [இ-3]

## முக்கிய அறிவித்தல்

யாழ் / தொழில் நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சைக்கென 1989 ஆம் ஆண்டு விண்ணப்பித்தவர்களுக்கும், 1990 ஆம் ஆண்டுக்கென விண்ணப்பித்துக் கொண்டிருப்பவர்களுக்குமான கூட்டம்.

இடம்: தொழில் நுட்பக் கல்லூரி மண்டபம்
காலம்: 22 – 06 – 1991 (சனிக்கிழமை)
நேரம்: காலை 10–00 மணி

அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

**பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் சார்பில் அமைப்பாளர்கள்.**

கொக்குவில்,
யாழ்ப்பாணம். (4159)


## வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

178, யாழ். பிறவுண் வீதியில் அமைந்துள்ள வண்ணை ஆங்கில வைத்தியசாலையின் கிளை ஸ்தாபனமாகிய வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையமொன்று (Specialist Consultation Centre) 560, ஆஸ்பத்திரி வீதியில் 15 - 6 - 91 முதல் இயங்கி வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு மக்களுக்கு அறியத்தருகிறேன்.

டாக்டர் வே. யோகநாதன்,
560, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (17102)


## நன் மரண ஞாபகம்

5ஆம் வருடம் 8ஆம் வருடம்



| அமரர் | அமரர் |
|---|---|
| அந்தோனியாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை | நீ. அந்தோனிப்பிள்ளை |
| தோற்றம்: 15-10-1918 | தோற்றம்: 04-04-1908 |
| மறைவு: 19-06-1986 | மறைவு: 07-04-1983 |

இறை பதமடைந்த எம் அருமைப்பெற்றோரை அன்புடன் நினைவு கூருகிறோம். வான் வீட்டில் இறை இன்பத்தில் இறை புகழ் பாட இவர்களுக்காக இறைஞ்சுவோம்.

அன்புடன் நினைவு கூரும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பற்றிமா வாசா,
சில்லாலை.

நாகசெட்டி கமம்,
நானாட்டான்.

[17217]


## DIPLOMA IN NURSING

## தாதியர் பயிற்சி நெறி

புதிய பயிற்சி நெறிக்கான விரிவுரைகள் ஆரம்பம்:

**24 - 06 - 1991**

★ ஆறு மாத கால இலகு விரிவுரைகள்
★ சிறந்த தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள்
★ பயிற்சிக்குகந்த ஆங்கில பார்மஸி வகுப்புகள்
★ உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குகந்தது.

விவரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. Peter's Lane, Hospital Road, Jaffna. (சி-0158)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

தேங்காய்ச் சிரட்டைகள் தொகையாக தேவை. தொடர்பு கொள்ளவும். ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனம், 58, குறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (17203)

ஸ்தாபனம் ஒன்றில் வரவேற்பாளராக கடமையாற்ற ஒரு பெண் தேவை. கடித மூலம் விண்ணப்பிக்கவும். S. பரமநாதன், கோப்பாய் தெற்கு, கோப்பாய். (17214)

### வகுப்புகள்

உதவி ஆங்கில ஆசிரியருக்கான இலக்கண வகுப்புகள் 19 – 6 – 1991 இல் நடைபெற உள்ளன. By B. Manjula 21/2, அம்மன் வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம். (17110)

### மூங்கில் தடிகள் தேவை

மூங்கில் தடிகள் தொகையாகத் தேவைப்படுகிறது. இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்: அண்ணா தொழிலகம், இணுவில் தெற்கு, இணுவில். (சி/0126)

### மணமகள் தேவை

யாழ். இந்துப் பெற்றோர் லண்டனில் வசிக்கும் 32 வயது Accountant மகனுக்கு லண்டன் அல்லது அவுஸ்திரேலியாவில் வசிக்கும் படித்த, அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர். இல: 321, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (17201)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைகாலவியல், சூதகக்குத்து, சருமநோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (4099)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

புலமைப் பரிசில் மாணவர்களுக்கு Paper Class (புதிய பிரிவு) 19–06–1991 புதன் பி.ப 3–30 ஆரம்பமாகிறது. வகுப்புகள் சனி, ஞாயிறு 10–30—12–30 நடைபெறும். பரீட்சை 30–06-1991 ஞாயிறு 8–00/10–30, பி.ப 1–00. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். பி ப 4–00 மக்கள் வைத்திய சாலை முன்பாக கொக்குவில் மேற்கில் நடைபெறும். (17220)

### தவறிவிட்டது

திருமணப் பதிவுப்படங்கள் சிலவும், நெகரிவ்களும் பலாலி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்திலோ, இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளையிலோ அல்லது கீழ்க்காணும் விலாசத்திலோ ஒப்படைக்கவும். 71/3, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். (17227)

## படிவம் இன்றி ஏமாற்றம்

வன்செயலால் இறந்தோர், ஊனமுற்றோர் நிவாரணத்துக்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவில் முடிந்து விட்டன.

இப்படிவங்களைப் பெறுவதற்காக பலமைல் தூரத்தில் இருந்து வருபவர்கள் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

இப்படிவங்கள் கொழும்பில் இருந்து வந்ததும் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-100)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி

### தங்கமலர் முத்துக்குமாரு

தோற்றம்: 12 – 05 – 1930 மறைவு: 19 – 06 – 1990

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்:

**கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

கொல்லன்கலட்டி வீதி,
தெல்லிப்பழை. [4150]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



பெற்றோர் மடியில்: 03—11—1972

ஐயனார் பாத அடியில்: 19—06—1990

### இராமச்சந்திரன் விக்னேஷா

அடலருணைத் திருக்கோபுரத்தே, அந்த வாயிலுக்கு
வட அருகில் சென்று கண்டு கொண்டேன்,
வருவார் தலையில்
தடபடெனப் படுகுட்டுடன், சர்க்கரை
மொக்கிய கைக்
கடதட கும்பக் களிற்றுக், கிளைய
களிற்றினையே
(கந்தர் அலங்காரம்)

கும்ப! (விக்னேஷா) திர! எங்கள்
செல்வக் குழந்தை! அன்பு அண்ணா!
தமிழ் செல்வ! நீ வாழ்க!
சாந்தி பெறுக!

**திரு. திருமதி இராமச்சந்திரன், தங்கைமார்: வினோ, பாலா.**

பறாளாய் வீதி,
சுழிபுரம். [சி-0122]

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் தவழ்ந்தது: 29 — 02 — 1909

விண்ணில் புகுந்தது: 19 — 06 — 1990



### திருமதி சின்னத்தம்பி தங்கம்மா

உன் பெயர் தங்கம். நீ ஒரு தங்கம். தங்கத் தாயாய், பேர்த்தியாய், பூட்டியாய் பாசத்தை கொட்டி எம்மை எல்லாம் ஆளாக்கி நல்நிலையில் வைத்தாய். உம்நினைவு கட்டித் தங்கமாய் எம்மனதில் என்றென்றும் ஒளிவீசும்.

உம் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டும்;

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

நெல்லியடி. [சி/0117]

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கனகசிங்கம் கந்தசாமி

(வவுனியா நீதிமன்ற முன்னாள் கிராமப் பணியாளரும், வவுனியா வாகினி ஹோட்டல் உரிமையாளரும்)

அன்னை மடியில்: 18 – 11 – 1951 ஆண்டவன் அடியில்: 10 – 07 – 1989

திதி: 19 - 06 - 1991

நல்லோனாய் வாழ்ந்தாய் – நீ
நானிலத்துப் பெயரெடுத்தாய்
வல்லோனாய் வாழ்வித்தாய்
நலம்பேணிக் குலம் காத்தாய்
சொல்லாமல் சென்றுவிட்டாய்
சோகமதை தந்து சென்றாய்
வல்லோன் வகுத்த விதி
வாட்டுதே எம்மை நிதம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல அம்பிகையின் திருவடியைப் போற்றி நிற்கின்றோம்.

உங்களின் பிரிவால் வாடும்:
**மனைவி, மக்கள், தாய், சகோதரர்கள்.**

'' இரதி பவனம் ''
புங்குடுதீவு – 10 [17174]

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### சண்முகம் உதயவர்மன் (பேபி)

(மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய கணித, விஞ்ஞானப்பிரிவு உயர்தர வகுப்பு மாணவனும், யா/கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவனும்)

அன்னையின் மடியில்: 27–2–1972 அந்நியன் பிடியில்: 19–6–1989

நேற்று வரை நடந்ததெல்லாம் நினைப்பதில்லை
நெஞ்சங்கள் சில நினைவை மறப்பதில்லை!
காற்றடித்தால் வளையாத இரும்பைப் போல்
காலத்தால் அழியாத நினைவு நீதான்!

உன் பிரிவால் வாடும்,
**பாசமுள்ள அப்பா, அம்மா, அண்ணாமார்.**

73, பேபி அவெனியூ,
பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

''உமா வாசம்'',
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(17199)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மாற்று மார்க்கம்

பூத்தமிழ் விழா இறுதி நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பேசிய விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழர்களின் இன்றைய அரசியல் நிலை குறித்து மிக நறுக்காகவும், விளக்கமாகவும் எடுத்துரைத்தார்.

தமிழர் பிரச்சினையை, பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு விருப்பம் உள்ளதாக அரசாங்கம் காட்டிக் கொண்டாலும், இராணுவ மேலாதிக்க நிலையில் இருந்தே அது பேச விரும்புகிறது. அவ்வாறு பேசினால் தான் அரசு கொடுக்க விரும்புவதைப் புலிகளைக் கொண்டு ஏற்கச் செய்ய முடியும் என அது நினைக்கிறது.

பேச்சுவார்த்தை குறித்து அமைச்சரவையிலும், அரசாங்கத்திலும் மூன்று கருத்துகள் இருக்கின்றன. அதனால் என்ன செய்வதென்று தெரியாத நிலையில் கொழும்பு குழம்பியுள்ளதாக திரு. பாலசிங்கம் சரியாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்.

அத்தோடு பேச்சுவார்த்தை தேவையானால் சிங்கள அரசு எங்களைத் தேடி வரட்டும். நாம் நிபந்தனையற்ற பேச்சுக்கு எப்போதும் தயார். ஆனால் நாம் அவர்களைத் தேடிப் போகமாட்டோம் — என்றும் கலாநிதி பாலசிங்கம் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார்.

ஆயுதப் போராட்டத்துக்கு முதன்மைத்துவம் கொடுக்கும் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதற்கான காரணத்தையும் அவர் வெகு சிலாக்கியமாக விளங்க வைத்தார்.

"எமது போராட்டத்துக்கு வெளிநாடுகளின் ஆதரவும் அங்கீகாரமும் தேவை. ஆகையால் நாம் போர் வெறியர்கள் அல்லர்; சனநாயகத்தையும், அமைதியையும் விரும்புபவர்கள் என்பதை வெளிநாடுகளுக்கு; உலகத்துக்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்பதற்காகவே பேச்சுவார்த்தைக்குத் தயாராகவும் இருக்கிறோம்" - என்று அவர் எடுத்துச் சொன்னார்.

தமிழர்கள் பலமான நிலையில் நின்று பேசினால் தான் அவர்களின் உரிமை கிடைக்கும், இல்லையேல் முன்னைய தமிழர் தலைவர்களை ஏமாற்றியது போல, இப்போதும் ஏமாற்றி விட அரசாங்கம் நிச்சயம் பொறிக் கிடங்கு வெட்டும்.

ஆகையால் பழைய சரித்திரம் தெரிந்தவர்கள், அரசியல் அறிவு அல்லது அனுபவம் உள்ளவர்கள் இந்த நிலைப்பாட்டை நிச்சயம் ஏற்றுக் கொள்வர். ஆயுதப் போராட்டம் நடத்தி ஒரு பலமான நிலைக்கு வந்த பின்னர், ராஜதந்திரம் இல்லாமல் கொழும்பு அரசிடம் ஏமாறுவதற்குத் தமிழர்கள் சோணகிரிகளாகக் கூடாது.

தமிழர்கள் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருந்த போதிலும், கொழும்பு அதனை இழுத்தடித்தால், தமிழரசு ஒன்றை உருவாக்கிவிட்டுப் போராடுவது என்ற திரு. பிரபாகரனின் திட்டம் ஒரு மாற்று மார்க்கமாகும். தமிழரசை உருவாக்காமல் இருந்தாலும் கொழும்பு போராட்டம் நடத்தத்தான் செய்யும். பாதிப்புகள் இழப்புகள் ஏற்படத்தான் செய்யும். தமிழர்களுக்கு என்று ஓர் அரசை உருவாக்கி விட்டுப் போராடினாலும் அதே இழப்புகளும், பாதிப்புகளுமே இருக்கும்.

எனவே தமிழரசை உருவாக்குவதற்கு ஒரு கால அவகாசம் விதித்து, அதற்கு முன் கொழும்பு அரசு தக்கபடி செயற்படாவிட்டால், செயலில் இறங்குவது நல்லது. ஒன்றும் தெரியாமல் காலம் செல்வதை விட ஏதோ ஒரு முடிவு வரும். அல்லவா?

# முற்றிலும் புதிய போக்கில் தமிழகத் தேர்தல் முடிவுகள்

## எதிர்க்கட்சிகளுக்கு 8 ஆசனங்கள் மட்டுமே

சென்னை, ஜூன், 19

தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகள் அனைத்தும் கடந்த திங்கள் இரவு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுவிட்டன.

தேர்தல் நடந்த 232 தொகுதிகளில் அ.தி.மு.க.— இந்திரா காங்கிரஸ் கூட்டணி 224 தொகுதிகளைக் கைப்பற்றியுள்ளது.

எட்டுத் தொகுதிகளை மட்டுமே எதிர்க்கட்சிகள் அனைத்தும் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டன.

### அ. தி. மு. க.

அ.தி.மு.க. மொத்தமாக 167 தொகுதிகளில் போட்டியிட்டது. அ.தி.மு.க. நிறுத்திய 167 வேட்பாளர்களில் நான்கு வேட்பாளர்களைத் தவிர, ஏனைய 163 வேட்பாளர்களும் தேர்தலில் வெற்றி பெற்று விட்டனர். இவர்களில் அ. தி. மு. க. பொதுச் செயலாளரான செல்வி ஜெயலலிதா (காங்கேயம் மற்றும் பர்கூர்) இரண்டு தொகுதிகளில் வெற்றியீட்டினார்.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. தமிழரசன் அ.தி.மு.க தேர்தல் சின்னத்தில் வெற்றியீட்டினார்.

எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் பணிபுரிந்த நெடுஞ்செழியன், கே. ஏ. கிருஷ்ணசாமி எஸ். டி. சோமசுந்தரம் ஆகியோரும் வெற்றி பெற்றவர்களில் அடங்குவர்.

### இந்திரா காங்கிரஸ்

இந்திரா காங்கிரஸ் கட்சி 65 வேட்பாளர்களை நிறுத்தியது. அவர்களில் நான்கு பேர் மட்டும் இத் தேர்தலில் தோல்வி அடைந்தனர். குமரி அனந்தன், பொன்னம்மாள் போன்ற பழைய எம். எல். ஏக்கள் உட்பட 61 பேர் வெற்றியடைந்தனர்.

### தி. மு. க.

கலைக்கப்பட்ட சட்டசபையில் தி. மு. கவுக்கு 146 உறுப்பினர்கள் இருந்தனர். தற்போது நடந்து முடிந்த தேர்தலில் தி.மு.க. சார்பில் 175 வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். ஆனால் ஒரே ஒரு தொகுதியை த்தான் தி. மு. கவினால் கைப்பற்ற முடிந்தது.

இத் தேர்தலில் வெற்றி பெற்றவர் தி.மு.க தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான திரு. மு. கருணாநிதி ஆவார்.

பத்தாவது தடவையாக திரு. மு. கருணாநிதி தமிழக சட்டசபைகுத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். ஆளும் கட்சி ஒன்று படுதோல்வி அடைந்ததுடன், அதன் தலைவர் மட்டுமே வெற்றி பெற முடிந்தது இந்திய தேர்தல் சரித்திரத்திலேயே இதுதான் முதல் தடவை என்று தெரிவிக்கப்படுகிறது.

### எஞ்சிய எட்டுத் தொகுதிகள்

அ. தி. மு.க - காங்கிரஸ் கூட்டணி பெற்றதுபோக எஞ்சிய எட்டுத் தொகுதிகளின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள் அனைவரும் சட்டசபையின் அனுபவசாலி உறுப்பினர்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

1957 இல் இருந்து சட்டசபை உறுப்பினராக இருந்து வரும் திரு. கருணாநிதி தி.மு.க. சார்பிலும் —

எம்.ஜி.ஆர். அரசில் அமைச்சர்களாக இருந்த திருநாவுக்கரசு, சாத்தூர் இராமச்சந்திரன் ஆகியோர் அண்ணா-புரட்சித் தலைவர் தமிழ் முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் —

எம். ஜி. ஆர். அரசில் அமைச்சராக இருந்த பண்ருட்டி இராமச்சந்திரன் பாட்டாளி மக்கள் சார்பிலும் —

முன்னாள் எம். எல். ஏ. பழனிச்சாமி இந்திய கம்யூனிஸ்ட் சார்பிலும் —

முன்னாள் எம். எல். ஏ. தம்புசாமி மார்க்ஸீய கம்யூனிஸ்ட் சார்பிலும் —

முன்னாள் எம். எல். ஏ. குமாரதாஸ் ஜனதா தள் சார்பிலும் —

முன்னாள் அ. தி. மு. க. எம். எல். ஏ. தாமரைக்கனி சுயேச்சையாகவும்— எதிர்க்கட்சி வரிசையில் புதிய சட்டசபையில் இருக்கப்போகின்றனர்.

இரண்டு சுயேச்சை வேட்பாளர்கள் இடையில் இறந்த காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்ட இரண்டு தொகுதிகளின் தேர்தல்கள் நடைபெற வேண்டியுள்ளன.

## அனைத்து தொகுதிகளும் கூட்டணி வசம்

தமிழகத்தில் உள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் அ. தி. மு. க. — காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றது.

காங்கிரஸ் 27 தொகுதிகளிலும், அ. தி. மு. க. 11 தொகுதிகளிலும் வென்றன. காங்கிரஸ் சின்னத்தில் போட்டியிட்ட ஐக்கிய கம்யூனிஸ்ட் வேட்பாளர் தா. பாண்டியன் வடசென்னைத் தொகுதியில் வெற்றி பெற்றார். (உ-எ)

## 'பாரத ரத்னா' ராஜீவ் காந்தி

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் நேருஜீயின் அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய் பட்டேலுக்கும் 'பாரத ரத்னா' விருது வழங்கப்படவுள்ளது.

## தோல்விக்கு வாஜ்பாய் கூறும் காரணம்

புதுடில்லி, ஜூன் 19

பாரதீய ஜனதா ஆட்சி நடத்தும் மாநிலங்களில் எமது கட்சியின் சாதனைகள் சரியான முறையில் மக்களுக்கு எடுத்துக் கூறப்படாததே அம் மாநிலங்களில் கட்சி அடைந்த தோல்விக்குக் காரணமாகும்.

பொறுப்பான எதிர்க்கட்சியாக, புதிய நாடாளுமன்றத்தில் பாரதீய ஜனதாக் கட்சி பணிபுரியும்.

இவ்வாறு அக்கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. அடல்பிஹாரி வாஜ்பாய் தெரிவித்தார்.

பாரதீப ஜனதா ஆட்சி புரியும் மாநிலங்களின் முதலமைச்சர்களை மாற்றும் எண்ணம் எதுவும் தற்போது கட்சிக்கு இல்லை என்றும் திரு. வாஜ்பாய் சொன்னார். (இ-எ)

## பீஹார், வங்காளம், டில்லி காங்கிரஸைக் கைவிட்டன!

புதுடில்லி, ஜூன் 19

இந்தியாவின் வடமாநிலங்களிலும் தென்மாநிலங்களிலும் இந்திரா காங்கிரஸ் அமோக வெற்றி பெற்ற போதிலும் பீஹார், மேற்கு வங்காளம், டில்லி யூனியன் பிரதேசம், உத்தரப்பிரதேசம் ஆகியவற்றில் அக்கட்சி முற்றாகப் பின்னடைந்திருக்கிறது.

தலைநகர் புதுடில்லியில் உள்ள 7 தொகுதிகளில் ஐந்தை பாரதீய ஜனதாக் கட்சி கைப்பற்றியது.

மேற்கு வங்காளத்திலும் வழமைபோல் இடதுசாரி முன்னணி வெற்றிவாகை சூடியது. காங்கிரஸ் இதுவரை அங்கு ஒரு தொகுதியிலேயே வெற்றிபெற முடிந்தது.

பீஹாரில் இதுவரை வெளிவந்த முடிவுகளில் ஒன்றுகூட காங்கிரஸுக்கு சாதகமாக அமையவில்லை.

பீஹாரில் ஜனதா தள் முன்னணியில் உள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் பாரதீய ஜனதா 9 தொகுதிகளையும், ஜனதா தள் 5 தொகுதிகளையும், காங்கிரஸ் இரு தொகுதிகளையும் இதுவரை கைப்பற்றியுள்ளன. (உ-த)

## பன்றி வளர்ப்போர் முன் அனுமதி பெற வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். மாநகரப் பகுதியில் பன்றி வளர்ப்போர், மாநகர சுகாதாரப் பகுதியின் முன் அனுமதி பெற்று மாநகர உப விதிகளுக்கு அமைய அவற்றை வளர்க்க வேண்டும். பன்றிகளை கட்டாக்காலிகளாக விடுவதை உடனடியாக தவிர்க்கப்பட வேண்டும்.

யாழ். சுகாதார வைத்திய அதிகாரி மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பன்றிகளை வளர்ப்போர் பாதசாரிகளுக்கும், வாகனப் போக்குவரத்துக்கும் இடைஞ்சல் விளைவிக்கும் விதத்தில் அவற்றை அலைந்து திரிய விட்டிருப்பது கண்டனத்துக்கு உரியது என்றும் - மூளைக் காய்ச்சல் போன்ற அபாயகரமான நோய்கள் ஏற்படவும் பன்றிகள் ஏதுவாக இருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் வளர்ப்பு நாய்களை வீதிக்கு வராதவாறு பார்த்துக் கொள்ளுமாறும் வரியிறுப்பாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ)

## தேடப்படும் ஒற்றைக் கண் நபர் ஒருவர் இன்னும் இந்தியாவிலாம்

சென்னை, ஜூன் 19

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக தேடப்பட்டு வரும் ஒற்றைக் கண் நபர் இந்தியாவிலேயே இன்னும் இருக்கிறார் என்று மத்திய புலனாய்வுத்துறையினர் அறிவித்துள்ளனர்.

சிவராசா என்ற பெயருடைய அந்த நபர் ராஜீவ் கொலையான தினம் ஸ்ரீ பெரும்புதூரில் பிஜாமா அணிந்து காணப்பட்டார் என்றும்—

அந்த நபர் ரகுபரன் என்ற பெயரிலும் அழைக்கப்பட்டு வந்தார் என்றும் மத்திய புலனாய்வுத்துறை அறிவித்துள்ளது.

அந்த நபரின் இடது பக்கம் செயற்கைக் கண் பொருத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சென்னை - பெஸன்ட் நகரில் முன்னர் காணப்பட்ட அந்த நபர் தற்போது எண்ணூர், பழனி மற்றும் கடலூர் பகுதிகளில் நடமாடுவதாகத் தெரிவதாகவும்—

அந்த நபரைப் பிடிப்பதில் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் மத்திய புலனாய்வுத்துறை கேட்டுள்ளது. [இ-எ]

# நிவாரண பொருள் எடுத்துவர அ'புரத்தில் அனுமதி தேவை

## தொண்டர் நிறுவனங்களுக்குக் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 19

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிவாரணப் பணிகளுக்கு பொருள்கள் கொண்டு செல்ல தொண்டர் நிறுவனங்களுக்கு கூட்டுப் படைத் தலைமையகம் கட்டுப்பாடு விதித்துள்ளது.

அநுராதபுரத்தில் வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாக சேவைகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள கூட்டுப் படைத்தலைமையக அதிகாரி கூட்டிய மாநாட்டில் [illegible] படி கட்டுப்பாடுகள் [illegible] தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் தலைமையகமாகக் கொண்டு இயக்கும் சகல தொண்டர் நிறுவனங்களும் வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு நிவாரணப் பொருள்களை எடுத்துச் செல்ல இனி அநுராதபுரம் அலுவலகத்திலேயே அனுமதி பெற வேண்டும்.

இதுவரை காலமும் கொழும்பு கூட்டுப்படை அலுவலகத்திலேயே அனுமதி பெற வேண்டும் என்று இருந்த நடை முறை மாற்றப்பட்டுள்ளது.

அந்த தொண்டர் அமைப்புகள் நிவாரணப் பொருள்களை எடுத்து, அநுராதபுரம் கொண்டு வந்து அனுமதிக்கப்படும் பொருள்களை மட்டுமே எடுத்து வரலாம்.

அத்துடன் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் இந்த மாகாணத்துக்கு செல்லும் போது, இந்த அலுவலகத்தில் அனுமதி பெற்று இருக்க வேண்டும் என்றும் அந்த நிறுவனப் பிரதிநிதிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பிரெஞ்சு வைத்தியக் குழு தவிர்ந்த ஏனைய அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். [இ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸை ஆதரிப்பதா? தேசிய முன்னணியில் லடாய்!

## புதிய எம். பிக்கள் சிலர் கட்சி தாவலாம்

புதுடில்லி, ஜூன் 19

புதிய அரசாங்கம் அமைப்பதில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவளிப்பது குறித்து தேசிய முன்னணித் தலைவர்களுக்கு இடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து உருவாகியுள்ள அரசியல் நிலை குறித்து, என்ன நிலைப்பாட்டை எடுப்பது என்பது பற்றி முடிவு செய்ய தேசிய முன்னணியின் அரசியல் குழு நேற்று மாலை முன்னாள் பிரதமர் வி. பி. சிங் தலைமையில் கூடுவதாக இருந்தது.

இதே வேளை—

இந்திரா காங்கிரஸ் அமைக்கும் கூட்டரசாங்கத்தில் தேசிய முன்னணி சேர வேண்டும் என்று முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஐ.கே. குஜ்ரால், ஒரிஸ்ஸா முதலமைச்சர் பிஜு பட்நாயக், முன்னாள் அமைச்சர் அஜித் சிங் ஆகியோர் வற்புறுத்தி வருகின்றனர்.

முன்னாள் மத்திய அமைச்சர்கள் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், ராம்விலாஸ் பஸ்வான், தெலுங்குதேசம் தலைவர் ஜெய்பால் ரெட்டி ஆகியோர் இந்திரா காங்கிரஸுடன் சேராது, அக்கட்சி அரசு அமைக்க வெளியில் இருந்து தேசிய முன்னணி ஆதரவளிக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றனர் என புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன.

இதனிடையில் தேசிய முன்னணி எம். பிக்களில் ஒரு பிரிவு முன்னணியில் இருந்து வெளியேறி இந்திரா காங்கிரஸுடன் சேரக் கூடும் என்று புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் பேசப்படுவதாக பி. பி. ஸி.யின் புதுடில்லிச் செய்தியாளர் மார்க் டலி நேற்றுத் தெரிவித்தார். (உ-எ)

## லோகசபை முடிவுகள்

இன்று அதிகாலை வரை அறிவிக்கப்பட்ட இந்திய லோகசபைத் தேர்தல் முடிவுகள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| | மொத்தத் தொகுதிகள் | — 543 |
| | தேர்தல் நடந்தவை | — 511 |
| | முடிவுகள் வெளியானவை | — 448 |
| ★ | இந்திரா காங்கிரஸ் | — 215 |
| ★ | பாரதீய ஜனதாக் கட்சி | — 96 |
| ★ | ஜனதா தள் | — 39 |
| ★ | மார்க்ஸிய கம்யூனிஸ்ட் | — 34 |
| ★ | இந்திய கம்யூனிஸ்ட் | — 12 |
| ★ | அ. இ. அ. தி. மு. க. | — 11 |
| ★ | தெலுங்கு தேசம் | — 12 |
| ★ | ஜன்மோர்ச்சா | — 5 |
| ★ | சிவசேனா | — 4 |
| ★ | ஆர். எஸ். பி. | — 4 |
| ★ | ஏனையவை | — 16 |

## மரண தண்டனை நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

பெண்களுடன் தகாத உறவில் ஈடுபட்டமைக்காக விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவருக்கு நேற்று மரணதண்டனை வழங்கப்பட்டது.

ஜெகன் (வரதராஜா சிறிகாந்—20 வயது) மூளாய் மேற்கு — இவருக்கு நேற்றுக் காலை நாவாந்துறை சந்தியிலும் —

கஸ்ரோ (சுந்தர்ராஜ் சுரேஷ்குமார்) கொழும்பு — இவருக்கு முத்திரைச்சந்தையிலும் — மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. (ஒ)

## இன்று

குருநகர், ஜூன் 19

வடஈழம் சிகை அலங்கரிப்பாளர் சங்க பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ், அடைக்கலமாதா பாடசாலையில் நடைபெறும். (ஒ - 51)

## மாணவர்கள், ஆசிரியர் கிளிநொச்சியில் ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

தமிழீழத்திலுள்ள பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் மீதான ஸ்ரீலங்கா அரசின் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களையும், அப்பாவி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதையும் கண்டித்து நேற்று முன்தினம் கிளிநொச்சியில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது.

ஊர்வலம் இரணைமடுச் சந்தியிலிருந்து ஆரம்பமாகியது. ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்

ஊர்வலம் நகர்ந்து கொண்டிருந்த வேளையில் ஸ்ரீலங்கா குண்டு வீச்சு விமானம் ஒன்று வட்டமிட்டு அதனை நோட்டமிட்டது.

இந்த அச்சுறுத்தலின் மத்தியிலும் ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள் எதுவித பதற்றமும் இன்றி சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

5 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய அறிக்கைகளின் பிரதிகள் கிளிநொச்சி அரச அதிபர், மாவட்டக் கல்விப் பணிப்பாளர், செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன.

ஊர்வலத்தின் இறுதியில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய முன்றலில் கண்டனப் பொதுக்கூட்டமும் இடம் பெற்றது. (ஒ-த)

## கொக்கட்டிச்சோலை சம்பவம்:

## படுகொலைகளை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு

கொக்கட்டிச்சோலையில் இராணுவம் நடத்திய படுகொலைகள் பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை பிரேமதாஸா நியமித்துள்ளார்.

சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று அந்த இடத்தில் விசாரணை நடத்திய பின்னர் ஜெயலத் கமிட்டி சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் இந்த ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஆணைக் குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற நீதியரசர் ஓ. எஸ். எம். செனவிரத்தின பணி புரிவார் என அறிவிக்கப்படுகிறது.

ஓய்வு பெற்ற நீதியரசர் சிவா செல்லையா மற்றும் ஓய்வு பெற்ற சிவில் சேவை அதிகாரி ஜனாப் எம். எம். சஹாப்தீன் ஆகியோர் ஏனைய உறுப்பினர்கள் ஆவர். (இ-எ)

## ஒரு தொகுதியில் 263 பேர் கட்டுப்பணம் இழந்தனர்!

264 பேர் போட்டியிட்ட பள்ளிப்பட்டுத் தொகுதியில் வெற்றியீட்டிய இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் தவிர்ந்த எஞ்சிய 263 வேட்பாளர்களும் தங்கள் கட்டுப் பணத்தைப் பறிகொடுத்தனர்.

249 வேட்பாளர்கள் போட்டியிட்ட அரவக் குறிச்சி தொகுதியில் வெற்றியீட்டிய அ. தி. மு. க வேட்பாளர், அவருக்கு அடுத்ததாக வந்த தி. மு. க வேட்பாளர் தவிர்ந்த எஞ்சிய 247 வேட்பாளர்களும் தங்கள் கட்டுப் பணத்தை இழந்தனர். (ஒ-எ)

## புலிகளின் தாக்குதலிலேயே ஹெலி நொருங்கியது!

வவுனியா — மன்னாருக்கு இடையேயான காட்டுப் பகுதியில் விழுந்து நொருங்கிய ஹெலிக்கொப்டரை விடுதலைப் புலிகளே சுட்டு வீழ்த்தினர் என்று நேரில் பார்த்த பொதுமக்கள் தெரிவித்தனர் என்று வரித்தாஸ் வானொலி அறிவித்தது.

அமெரிக்கத் தயாரிப்பான இந்த ஹெலி, இயந்திரக் கோளாறு காரணமாக விழுந்து நொருங்கவில்லை என்று தெரிவிக்கப்படுவதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டது.

வெரித்தாஸ் வானொலி தெரிவித்த வேறு சில தகவல்கள் வருமாறு:-

வடமாகாணத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றும் எண்ணத்தை விட, வடமாகாணத்தில் விடுதலைப் புலிகளின் போர்த்திறனைப் பலவீனமடையச் செய்வதே அரசின் நோக்கம் என்று இராணுவம் கூறியுள்ளது.

ஆனாலும், இராணுவம் வடமாகாணத்தின் சில பகுதிகளைக் கைப்பற்றினாலும் அப்பகுதிகளைத் தொடர்ந்து தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள இயலாது என்றும் —

இதற்குக் காரணம் விடுதலைப் புலிகளின் போர்த் திறனே என்றும் செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஒ-எ)

# நமது நாட்டின் பிரச்சினைகள் அரசின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவை!

## அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 19

நாம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவை ஆகும்.

எந்த ஒரு நாட்டிலும் பிரச்சினை இல்லை என்று கூறிவிட முடியாது. இலங்கை அதற்கு விதிவிலக்கல்ல. ஏன் பிரிட்டனும் கூட விதிவிலக்கல்ல.

— இவ்வாறு நேற்றுநாடாளுமன்றத்தில் தெரிவித்தார் வெளியுறவு அமைச்சர் ஹறோல்ட் ஹேரத்.

பிரிட்டிஷ் வெளியுறவு துணை அமைச்சர் மார்க் பொயிட், பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் அண்மையில் விடுத்த அறிக்கைக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

முன்னர் பிரிட்டிஷ் தூதராக இருந்த திரு. கிளாட்ஸ்ரோன் மனித உரிமை பற்றி அரசிடம் கேள்வி எழுப்பியதற்காக அரசு அவரை நாட்டைவிட்டு வெளியேற்றவில்லை. அதற்காக அரசு அவரை வெளியேற்றியது என்று கூறுவது தவறாகும். —என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை தான் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மறைக்க முற்படவில்லை. இலங்கையில் உள்ள நிலைமை பற்றி ஐக்கிய நாடுகள் சபைக்கு விளக்கிக் கூறப்பட்டுள்ளது—

ஏனைய நாடுகளின் தூதர்கள் கூட மனித உரிமை பேணல் பற்றி அரசுடன் பேச்சு நடத்தி உள்ளனர்— என்றும் அவர் சொன்னார்.

## 3 போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

வவுனியா, குருக்களூரில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா இராணுவத்தினருக்கும் இடையே நடந்த மோதலில் 2 பெண் போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

அல்வாய் மேற்கைச் சேர்ந்த கிரணா (ஜெயராணி பாலசுப்பிரமணியம்), தெல்லிப்பளையைச் சேர்ந்த கீதா (தர்சினி திருச்செல்வம்) ஆகியோரே வீரமரணமடைந்தனர்.

அதே இடத்தில் அன்று மாலை 6மணிக்கு நடந்த மோதலில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஜெகன் (காந்திராசா) என்ற போராளி வீரமரணமடைந்தார். (ஒ-த)

## கொக்கட்டி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தைச் சார்ந்தவர்கள் தவறுகளைச் செய்யும் போது அரசு கண்டு கொள்ளாமல் இருப்பதே இத்தகைய மனித உரிமை மீறல்கள் இடம்பெற வழி வகுக்கிறது என்று இலங்கை மனித உரிமைக் கழகம் கண்டித்திருக்கிறது. [உ-எ]

## பாண்டிச்சேரி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணி எம். எல். ஏக்களின் கூட்டம் வார இறுதியில் நடைபெறும் என்று பிரதேச காங்கிரஸ் தலைவர் திரு. சுப்பிரமணியம் தெரிவித்தார். (உ-எ)

## என்.டி. திவாரி தோற்றார்



உத்தரப் பிரதேசம் – நைனிடால் நாடாளுமன்றத் தொகுதியில் இருந்து போட்டியிட்ட இந்திரா காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திரு. என்.டி. திவாரி, பாரதீய ஜனதா வேட்பாளரிடம் 11 ஆயிரத்து 400 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார்.

ராஜீவ் காந்தி கொலையுண்டதன் பின்னர் இந்திரா காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவர் தெரிவுக்கு இவரது பெயரும் பலமாக அடிபட்டது தெரிந்ததே. (உ-எ)

## மட்டக்களப்பில்...

(1ஆம் பககத் தொடர்ச்சி)

வீட்டினுள் போட்டு வீட்டைக் கொளுத்தியுள்ளனர்; 6 ஆண்களைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

கடந்த 14 ஆம் திகதி படையினர் நாசிகன்தீவு என்ற இடத்தில் 6 ஆண்களைக் கைது செய்து வெட்டிக் கொன்றனர். (உ-த)

## ஆசிரிய மாண...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்தை அடைந்தது. அங்கு மகஜரின் பிரதி ஒன்று கையளிக்கப்பட்டது.

இறுதியாக பேரணி யாழ். கல்வி அலுவலகத்தைச் சென்றடைந்தது. அங்கு கல்வி அதிகாரி திரு. ஆர். சிவானந்தனிடம் மகஜரின் பிரதி ஒன்று வழங்கப்பட்டது.

பேசாலை, கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவங்கள் மற்றும் பல இடங்களிலும் அப்பாவி மக்கள் கொலை செய்யப்படுவது, பெண்கள் பாலியல்வன்முறைகளுக்கு உள்ளாக்கப் படுதல் போன்ற பல அத்து மீறல்கள பற்றியும் மகஜரில் கண்டிக்கப்பட்டிருந்தது. (ஒ-5-143)

## புதிய இந்தியப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிலர் முயன்று வருகின்றனர்.

பி. வி. நரசிம்மராவ் கட்சியின் மூத்த தலைவர்; மிகுந்த அனுபவசாலி; சிறந்த நிர்வாகி; தனக்கு எனக் கட்சிக்குள் கோஷ்டிகளைச் சேர்த்துக் கொள்ளாதவர்.— எனவே அவரைப் பிரதமராகத் தேர்ந்தெடுக்க மூத்த தலைவர்கள் விரும்புகின்றனர்.

ஆனால் வயதில் குறைந்தவரான மராட்டிய முதல்வர் சரத் பவாருக்கும் பிரதமராக வருவதற்கு கட்சிக்குள் அதிக ஆதரவு இருப்பதாகத் தெரிகிறது.

துடிப்பான தலைவர் என்ற பெயரெடுத்தவர் சரத்பவார்; அவரது மாநிலத்தில் கட்சி ஈட்டிய பெரு வெற்றி அவருக்கு பெரும் வலுவைக் கொடுத்திருக்கிறது.

எது எப்படியிருந்தாலும்— அமைக்கவிருக்கும் சிறுபான்மை அரசு நிலையான ஆட்சியைத் தருமா என்பது கேள்விக் குறியே என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர். [உ-5]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19-06- 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org